I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.3
M.C.O.P.NO.512/2022

| | | |
|---|---|---|
| Name | : | Sasikumar |
| Father Name | : | Chandiran |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.07.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :**01.20 p.m

**முதல் விசாரணை**

நான் B.A. படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

சம்பவம் தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது. நான் கருகம்புத்தூரில் மளிகை கடை வைத்துள்ளேன். சம்பவம் நடந்த அன்று திருவிழா நடந்தது. லாரி மண் ரோட்டில் நின்று கொண்டிருந்தது என்றால் இல்லை தேசிய நெடுஞ்சாலையில் நின்று கொண்டிருந்தது. திருவிழா நடந்ததால் தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு பக்கமும் நல்ல கூட்டம் என்றால் சரிதான். வண்டிகள் போக முடியாதவாறு கூட்டம் இருந்தது என்றால் சரிதான்.

பரந்தாமன் தான் தலைகவசம் அணியாமல் வந்து மோதி கொண்டார் என்றால் சரியல்ல. தலைகவசம் அணிந்திருந்தார். அவர் மெதுவாக வந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. லாரி மீது எந்த தவறும் இல்லை என்று சொல்வது சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :**01.30 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.